


# பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா

திருவெறும்பூர், ஏப்.3– பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் 27–வது பட்டமளிப்பு விழா பாய்லர் தொழிற்சாலை எம்.டி ஹாலில் நேற்று நடந்தது. விழாவிற்கு பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் வி.எம்.முத்துகுமார் தலைமை தாங்கி பேசினார். விழாவில் மாணவர் இ.என்.சிநேகராஜிக்கு தங்க பதக்கம் வழங்கப்பட்டது. விழாவில், பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் இயக்குனர் எஸ்.கருத்தையா பாண்டியன் பேசும்போது, 1984–ம் ஆண்டில் இந்த கல்வி நிறுவனம் தனது மேலாண்மை பட்ட மேற்படிப்பை தொடங்கியது. தற்போது இக்கல்லூரி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தன்னாட்சி நிறுவனமாக வளர்ச்சி பெற்றுள்ளது. இக்கல்லூரி புதிய கணக்கெடுப்பின்படி இந்திய அளவில் ஒரு தனித்துவமான ஏ.1 குழுவின் இடத்தையும், தமிழக அளவில் முதலாவது இடமும் பெற்று உள்ளது, என்றார். முடிவில் பேராசிரியர் எம்.சங்கரன் நன்றி கூறினார்.

அழகிய
தனித்தனி வீடுகள்